# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அரையாண்டுத் தேர்வு

## 2016- 2017

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 12

# விடைகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. ஆரியம் தமிழரிடையே ஊடுருவிய காலம்

அ) முதற்கழகம் ஆ) கடைக்கழகம்

இ) இடைக்கழகம் ஈ) கழகம் மருவியகாலம்

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

2. கூத்தருக்காகக் கடலாடுவிழா எடுத்தவன்

அ) சோழன் ஆ) சேரன் இ) நெடியோன் ஈ) குலோத்துங்கன்

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

3. பின்வருவனவற்றுள் அன்மொழித்தொகை

அ) சடசட ஆ) அல்லும்பகலும்

இ) கருங்குழலி ஈ) ஓடுஒடு

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

4. ஐம்படைத்தாலியில் அடங்காத படைக்கருவி

அ) தண்டு ஆ) வாள் இ) அம்பு ஈ) சங்கு

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

5. ஒரு பாட்டில் அல்லது பாவில் சொல்லழகைத் தரும் அணி

அ) உவமைஅணி ஆ) எதுகைஅணி

இ) உருவகஅணி ஈ) சொல்லணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ■

6. **ங், ஞ், ண், ந், ம், ன்** என்ற எழுத்துக் கூட்டம்

அ) இடையினமெய் ஆ) வல்லினமெய்

இ) உயிரினம் ஈ) மெல்லினமெய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ■

7. கதிரமலை என்று அழைக்கப்பட்ட இடம்

அ) பூநகரி　　ஆ) மாங்குளம்　　இ) வன்னி　　ஈ) கந்தரோடை

அ) □　ஆ) □　இ) □　ஈ) ■

8. முந்நீர் எனப்படுவது

அ) ஆறு　　ஆ) குளம்　　இ) கிணறு　　ஈ) கடல்

அ) □　ஆ) □　இ) □　ஈ) ■

9. ஆரியரது மேலாண்மையின் கீழ் வாழ விரும்பாத திராவிட மக்கள் குடியேறிய இடம்

அ) வேங்கடமலை　　ஆ) இமயமலை

இ) திருகோணமலை　　ஈ) குடகுமலை

அ) ■　ஆ) □　இ) □　ஈ) □

10. தமிழரிடையே உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற நிலையை உருவாக்கியவர்கள்

அ) தமிழர்　　ஆ) ஆரியர்　　இ) சிங்களவர்　　ஈ) களப்பிரர்

அ) □　ஆ) ■　இ) □　ஈ) □

11. வாரணம் பொருத மார்பு என்பது

அ) உவமையணி　　ஆ) உருவகவணி

இ) உயர்வுநவிற்சியணி　　ஈ) எதுகையணி

அ) □　ஆ) □　இ) ■　ஈ) □

12. பலர்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஓடினான்　　ஆ) பறந்தது　　இ) சென்றான்　　ஈ) நடந்தனர்

அ) □　ஆ) □　இ) □　ஈ) ■

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

13. இயேசுநாதரைக் காட்டிக் கொடுத்தவன்

அ) தோமசு ஆ) யூதாசு இ) இலியாசு ஈ) டேவிற்

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

14. பொரியல் உண்டான். என்பதில் வந்துள்ள ஆகுபெயர்

அ) சினை ஆ) குணம் இ) தொழில் ஈ) இடம்

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

15. நீர்ப்பூக்களில் ஒன்று

அ) மல்லிகை ஆ) குவளை இ) செவ்வரத்தை ஈ) செவ்வந்தி

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

16. பின்வருவனவற்றில் உரிச்சொல்

அ) வந்தான் ஆ) மரம் இ) கழி ஈ) ஆன்

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

17. வடக்கிருந்து உயிர் நீத்த மன்னன்

அ) பாண்டியன் ஆ) சேரலாதன் இ) சோழன் ஈ) குலோத்துங்கன்

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

18. பின்வருவனவற்றுள் வினையாலணையும் பெயர்

அ) படித்தவன் ஆ) படித்த இ) படித்து ஈ) படித்தான்

அ) ■ ஆ) □ இ) □ ஈ) □

19. களப்பிரர் என்ற வடபுலத்தவர் தமிழ்நாட்டில் நுழைந்த காலம்

அ) கி.பி 2ஆம் நூற்றாண்டு ஆ) கி.மு 2ஆம் நூற்றாண்டு

இ) கி.பி 6ஆம் நூற்றாண்டு ஈ) கி.மு 6ஆம் நூற்றாண்டு

அ) ■ ஆ) □ இ) □ ஈ) □

தமிழர் கல்விப் பேரவை

20. பின்வருவனவற்றில் **பகு சொல்**

அ) மரம் ஆ) ஆறு இ) நிலம் ஈ) தண்ணீர்

அ) □ ஆ) □ இ) □ ஈ) ■

21. பெயர்ச்சொல்

அ) ஆறுவகை ஆ) ஏழுவகை இ) நான்குவகை ஈ) ஐந்துவகை

அ) ■ ஆ) □ இ) □ ஈ) □

22. ஊடக வெளிச்சத்தால் ஊழல்களைப் படம் பிடித்துக் காட்டுபவர்

அ) எழுத்தாளர் ஆ) ஊடகவியலாளர்
இ) அறிவியலாளர் ஈ) பாடகர்

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

23. நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த
இளந்தென்றலே என்று பாடியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) நல்லத்துவனார்
இ) பாவேந்தர் ஈ) கண்ணதாசன்

அ) □ ஆ) □ இ) □ ஈ) ■

24. தமிழினி ! இங்கே வா ! என்பதில் வந்துள்ள வேற்றுமை

அ) 2ஆம் வேற்றுமை ஆ) 5ஆம் வேற்றுமை
இ) 8ஆம் வேற்றுமை ஈ) 1ஆம் வேற்றுமை

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

25. நன்னூலை எழுதியவர்

அ) அகத்தியர் ஆ) பவணந்தி
இ) தொல்காப்பியர் ஈ) நக்கீரர்

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

26. கருத்தின்றிப் பெயர் வைப்பவர்களைச் சாடும் கவிஞன்

அ) அம்பி ஆ) அமுதன் இ) தாமரைக்கண்ணன் ஈ) இரவி

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

27. பின்வருவனவற்றில் கருப்பொருள்

அ) நிலம் ஆ) ஒழுக்கம் இ) பொழுது ஈ) நிலைத்திணை

அ) □ ஆ) □ இ) □ ஈ) ■

28. **ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ** என்பன

அ) நெடில் எழுத்துகள் ஆ) குறில் எழுத்துகள்

இ) இன எழுத்துகள் ஈ) உயிர் எழுத்துகள்

அ) ■ ஆ) □ இ) □ ஈ) □

29. அருண்மொழித்தேவன் என்ற இயற்பெயருக்குரிய மன்னன்

அ) குலோத்துங்கன் ஆ) இராசராசசோழன்

இ) நெடுஞ்செழியன் ஈ) சேரலாதன்

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

30. கற்றான் என்ற வினைச்சொல்லின் வினையடி

அ) கற் ஆ) கற்ற இ) கல் ஈ) கற்று

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

| |
|---|
| *விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடப்பட்டிருந்தால் ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி.* |

புள்ளிகள் 30

தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவை

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

உலகம் தனது வரலாற்றில் மாவீரர்கள், மாமேதைகள், அறிவியலாளர்களைப் புகழ்ந்து ஏற்றிக்கொண்டே வந்திருக்கின்றது. தாய் நாட்டில் பிறந்ததனால் பெருமைப்படும் நம் போன்றவர்களிடையே தம்மால் தம் தேசத்தையே பெருமை கொள்ளச் செய்த மாண்புமிகு தலைவர்கள், மாவீரர்கள் உயிரோடு வாழ்ந்த காலத்தின் பின்னரும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடிக்கின்றனர்.

ஒரு முறை விருது நகரில் உள்ள ஒரு கோவில் யானை மதம் பிடித்து எல்லாப் பொருட்களையும் அடித்து நொருக்கியபடி ஓடத் தொடங்கியது. யானைப் பாகன் முதல் பொதுமக்கள் வரை உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு அஞ்சி ஓடினர். இதனைக் கேள்வியுற்று அங்கு வந்தான் சிறுவன் ஒருவன். அவனுடைய கையில் ஓர் இரும்புச் சங்கிலி இருந்தது. துணிச்சலுடன் யானையை எதிர்கொண்டு யாரும் எதிர்பாராத வகையில் சங்கிலியால் யானையின் பின்னங்கால்களைப் பிணைத்து யானையை அடக்கினான். பொதுமக்களைக் காப்பாற்றிய அச்சிறுவனை ஊரே பாராட்டியது. அச் சிறுவனே பின்னாளில் பெருந்தலைவர், கிங்மேக்கர் என உலகமே போற்றிய காமராசர். பள்ளிகளில் நண்பகல் உணவுத்திட்டத்தை ஏற்படுத்தி அவர் ஏழைமக்களுக்கிடையே கல்விப்புரட்சியை ஏற்படுத்தினார். காமராசர் திறமைக்கு மட்டுமே முதன்மையளித்த ஒரு சிறந்த முதல்வராக விளங்கினார். அவரது ஆட்சிக்காலம் தமிழ் நாட்டு அரசியலில் பொற்காலமாக விளங்கியது. இந்திய அரசு அவரது மறைவிற்குப் பின்னர் 1976 ஆம் ஆண்டு 'பாரதரத்னா' என்ற வெற்றியாரத்தை (விருதை) வழங்கி அவருக்கு மதிப்பளித்தது.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

1. எவர்களை உலகம் புகழ்ந்து ஏற்றுகிறது?

*மாவீரர்கள் , மாமேதைகள் , அறிவியலாளர்கள் என்பவர்களை உலகம் புகழ்ந்து ஏற்றுகின்றது .*

2. சிறுவன் மதம்பிடித்த யானையை எவ்வாறு அடக்கினான்?

*சிறுவன் மதம்பிடித்த யானையை சங்கிலியால் யானையின் பின்னங் கால்களைப் பிணைத்து அடக்கினான் .*

3. உயிரோடு வாழ்ந்த காலத்தின் பின்னரும் மக்கள் மனதில் இடம் பிடிப்பவர்கள் யாவர்?

*உயிரோடு வாழ்ந்த காலத்தின் பின்னரும் மக்கள் மனதில் இடம்பிடிப்பவர்கள் மாவீரர்கள் , மாண்புமிகு தலைவர்கள் .*

4. எத்திட்டத்தின் மூலம் காமராசர் ஏழைமக்களிடையே கல்விப்புரட்சியை ஏற்படுத்தினார்?

*(பள்ளிகளில்) நண்பகல் உணவுத்திட்டத்தின் மூலம் காமராசர் ஏழை மக்களிடையே கல்விப்புரட்சியை ஏற்படுத்தினார்.*

5. பெருந்தலைவர் காமராசருக்கு இந்திய அரசு எவ்வாறு மதிப்பளித்தது?

*பெருந்தலைவர் காமராசருக்கு இந்திய அரசு பாரதரத்னா என்ற வெற்றியாரத்தை வழங்கி மதிப்பளித்தது.*

| |
|---|
| *முழுவிடை ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள்.* |

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

### 3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தமிழினத்தின் சான்றாண்மை கொண்ட போர்முறைக்குச் சான்றாக தமிழீழத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றைக் குறிப்பிடுக.

**போராளிகள் தாம் சிறைப்பிடித்து வைத்திருந்த படைவீரரை விடுவித்தமை.**

2. ஆரியரது வருகையால் தமிழிலக்கியங்கள் மறைக்கப்பட்டு ஆரிய இலக்கியங்கள் மேலோங்கின என்பவற்றுக்கான எடுத்துக்காட்டுகள் தருக.

**ஆரியர்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் போன்ற நூல்களை மறைத்து இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களைத் தமிழ் மக்கள் படிக்குமாறு செய்தனர்.**

3. ஆரியம் கேரளம் என்று பெயர் மாற்றிய நாடு எது?

**சேரநாடு**

4. உலக நாடுகள் ஏன் தமிழீழப் போராட்டத்தை நசுக்க விரும்பின?

**தமிழரது விடுதலைப் போரை வெற்றி பெற விட்டால் தம் நாடுகளுக்கிடையே உள்ள விடுதலைப் போராட்டங்கள் வலுப்பெறுமென அஞ்சி.**

5. தேவாரகாலத்தில் தமிழுக்காகக் கடும் பரப்புரை செய்த நாயன்மார்கள் யாவர்?

**சம்பந்தர், மாணிக்கவாசகர்**

6. குறுந்தொடிகளைந்த கையில் சரபம் ஏந்தி நின்றவன் யார்?

**நெடுஞ்செழியன்**

7. பாலை நிலம் எவ்வாறு தோன்றியது?

**குறிஞ்சியும் முல்லையும் வளங்குறைந்து தம் இயல்பு மாறிய பொழுது.**

***ஒவ்வொரு விடைக்கும் (02 புள்ளிகள்.)***

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**4) கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

காலமெல்லாம் உனைக்காப்பேன் என் தமிழே - எம்
காவலர் காட்டிய வழியில் என் மனமே

*தலைப்புக்குப் பொருத்தமான கருத்துள்ள கவிதை வரிகளுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்க வேண்டும்.*

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

5) **இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அ. இலக்கண வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும் ?

**நான்குவகை**

ஆ. அவற்றுள் இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

**பெயர்ச் சொல்** - நிலவன், கப்பல், பூனை **வினைச் சொல்** - ஓடின, வந்தான், ( ஐம்பால் முக்காலம் )

**இடைச் சொல்** - வேற்றுமை உருபுகள், விகுதிகள், இடைநிலைகள். (கற்றல் வள நூலைப் பார்க்கவும்) **உரிச்சொல்** - சால, உறு, தவ, நனி கூர் கழி

2. அ. சுட்டெழுத்துகள் எவை?

**அ, இ, உ**

ஆ. வினாவெழுத்துகள் எவை?

**எ, யா, ஆ, ஓ, ஏ**

3. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

உவமையணி :- **மலர் போன்ற கை, கயல் போன்ற விழி.**

உருவகவணி :- **முகமதி, விழிக்கயல்**

4. பின்வரும் எழுத்துக் கூட்டங்களைத் தருக .

அ. வல்லின மெய் :- **க் ச் ட் த் ப் ற்**

ஆ. இடையின மெய் :- **ய் ர் ல் வ் ழ் ள்**

***( மேலதிக விளக்கங்களுக்குத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கற்றல் வள நூலைப் பார்க்கவும். )***

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

5. அ. வேற்றுமைத்தொகைகள் எத்தனை?

**ஆறு ( 6 )**

ஆ. பின்வருவன ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

வேற்றுமைத் தொகை

**ஔவையார் பாடல், வான் மதி**

வேற்றுமை விரி

**ஔவையாரது பாடல் , வானின் கண் மதி.**

- பொருத்தமான விடைக்குப் புள்ளியிடவும் -

புள்ளிகள் 15

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

நாம் அறிவாளியாக இருந்தால் மட்டும் போதாது. புத்திசாலியாகவும் இருக்க வேண்டும். அறிவாளி, புத்திசாலி இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. தன் அறிவை எல்லோருக்கும் பயன்படுத்துபவன் அறிவாளி. எடுத்துக்காட்டு தோமசு அல்வா எடிசன். தன் அறிவையும் மற்றவர்கள் அறிவையும் தனக்குப் பயனுள்ளதாக மாற்றிக் கொள்பவன் புத்திசாலி. எடுத்துக்காட்டாக சில அரசியல் தலைவர்களைக் குறிப்பிடலாம். செல்லும் இடங்களில் தம்மைப் பார்த்துப் பொறாமைப் படுபவர்களைப்பற்றிக் கவலையே படாமல் கண்ணை மூடிக்கொண்டு தன் முன்னேற்றத்திலேதான் கவனமாக இருப்பார்கள். ஆனால் இவர்கள் தங்கள் எதிரிகளிடம் எளிதாகச் சிக்கிக்கொள்வர். இவர்களின் புத்தசாலித்தனம் இவர்களுக்கே கேடாக அமைந்துவிடும். அறிவாளி என்றைக்கும் தன் அறிவால் தன்னைக் காப்பாற்றிக் கொள்வான். புத்திசாலி தான் நினைப்பதுதான் சரி என்ற நினைவில் தன்னையே தான் இழந்துவிடுவான். நாங்கள் புத்திசாலியாக இருப்பதை விட அறிவாளியாக இருப்பதே சிறந்ததாகும். புத்திசாலிகள் என்றைக்கோ ஒரு நாள் வெற்றியடைவார்கள். அறிவாளிகள் என்றைக்கும் வெற்றியடைவார்கள்.

**சுருக்கத்திற்கான குறிப்புக்கள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தென்றல் வரவு பற்றிப் புலவர்கள் கூறியவற்றை விளக்குக
- ✸ இன்றைய தமிழ் இளையோர் சிலரிடம் காணப்படும் குறைகளும் அவற்றைத் தீர்ப்பதற்காக நீர் கூறும் வழிமுறைகளும்
- ✸ உலகநாடுகளில் காணப்படும் போரச் சூழலும் அன்றாடம் மக்கள் எதிர் நோக்கும் இடர்களும்

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை